★ அரியணை மீதுள்ளார் அமைச்சர் ★

Regd: No. M. 5458 Phone No. 4502:
விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 16—12—50 | மணி 14-

## டில்லியில் அமர்ந்து ஆணை பிறப்பிப்பதில் பயன் என்ன?

(0)

### டில்லிக்கும் சென்னைக்கும் தொடர்பிருப்பதற்குப் பொருள் உண்டா?

(:0:)

### தோழர் முன்ஷியின் விந்தைப்போக்கு

சென்னை, டிச, 14—

சென்னை மண்டலத்தில் கடந்த ஐந்தாண்டுகளாகப் பஞ்சம்; மக்கள் நிலை மிகமிகப் பரிதபிக்கக் கூடிய நிலைக்கு வந்துவிட்டது. இந்த ஐந்தாண்டுகள்வரை அரசாங்கத்தில் அமர்ந்திருப்பவர், நாட்டு உணவு நிலையைப் பெருக்க என்ன செய்திருக்கின்றனர்!

உணவுப் பெருக்கத்தின் பெயரைக் கூறிக்கொண்டு எவ்வளவு பணம் அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்டிருக்கிறது! செலவழிக்கப்பட்ட பணத்திற்குத் தக்க பலன் தரக்கூடிய உருவான திட்டம் ஏதாவது வகுக்கப்பட்டதா?

திறமைமிக்க விஞ்ஞானிகளின் உதவியை நாடி, மழை பெய்யாப் பஞ்சத்தையும் சமாளிக்கும் வழிகளை அரசாங்கம் வகுக்க முயன்றதா? மத்திய அரசாங்கமேனும் இதுபற்றிய கவலை எடுத்துக் கொண்டதா?

மழையற்ற நாடாகிய ரஷ்யாவில் அரிசி விளைகிறது மழையின் உதவியில்லாமல், தென் அமெரிக்காவில், எகிப்திலெல்லாம் புதிய முறையில் அரிசி விளைவிக்கும் வேலையைச் செய்துவருகின்றனர். ஆனால் அவைகள் எல்லாம் நம் அரசாங்க ஆட்சியாளர்களின் கண்களுக்குத் தெரியவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பஞ்சம். பஞ்சத்திற்குக் காரணம் தெய்வீகம் என்று கூறித் தப்ப முயலுகின்றனர். ஆனால் தெய்விகக் கோபத்துக்குக் காரணம் என்னவென்பதைப் பொதுமக்கள் ஆராய இறங்கினால், ஆட்சியாளர் நல்லவர் களல்லர் என்று கூறிவிடுவார்களே, அதற்கேற்ற ஆன்றோர் செய்யுள்களைப் பாடிக் காட்டுவார்களே என்று கவலைப்படவில்லை ஆட்சியாளர். எதன் மீதாவது பழியைப் போட்டு, பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் நிலையில் இருக்கின்றனர்.

அண்மையில் உணவு நெருக்கடி பற்றி விவாதிக்க பம்பாயில் கூடிய உணவு மந்திரிகள் மாநாட்டிலும் இவ்வாறே பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வேலை நடைபெற்றிருக்கிறது. இந்தியா முழுவதற்கும் உணவு அமைச்சராகயிருக்கும் தோழர் முன்ஷி, உல்லாசமாக டில்லி சிம்மாதனத்தில் அமர்ந்து கொண்டு அப்போதைக்கப்போது ஆணைகளையும் அறிக்கைகளையும் பிறப்பித்துக் கொண்டிருந்துவிட்டால் போதுமென்று எண்ணுகின்றார்போலும்! நாட்டின் நிலையை நேரிற் காணவேண்டும் என்றும் அக்கரை அவருக்குச் சிறிதேனும் இருப்பதாகத் தெரியவில்லை.

கிராமங்களில் உணவுப் பங்கீடு முறையை ஒழிப்பதோ வைத்துக் கொள்வதோ, அந்தந்த அரசாங்கத் ...

தப்ப ஒரு நடு அரசாங்க அமைச்சர் தேவையா? இதற்கு மாகாணங்கள் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அந்தந்த நாடுகள் அதனதன் வேலையை சற்று பொறுப்பாக நடத்திக்கொண்டு போவதற்கு மத்திய அரசாங்கம் ஏன்? அதில் ஒரு அமைச்சர் ஏன்? அந்த அமைச்சர்களிடம் அடிக்கடி சென்னை மாகாண அமைச்சர்கள் காவடி தூக்கிச் செல்வதேன்? அதற்காகும் ஏராளமான செலவை ஏழைமக்கள் தலையில் சுமத்தி வரிகளாக வாங்கி ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுவானேன்?

கிராம உணவுப் பங்கீடுமுறை ஒழியவேண்டுமென்றால், கிராம மக்களுக்கு உணவுப்பொருள்கள் ஒழுங்காகக் கிடைக்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு அல்லவா? நிலமில்லாத ஏழை மக்களுக்கு எளிதில் உணவுப்பொருள்கள் கிடைக்கக்கூடியவாறு அரசாங்கக் கடைகள் திறக்கப்படுவதும் அதற்கு வேண்டிய அரிசி சேமிப்பு இருக்குமாறு கவனித்துக் கொள்வதும் அரசாங்கத்தின் கடமையல்லவா! ஆனால் இந்தக் கடமையை, மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதில் பெருவிருப்பங் கொண்டுள்ள முன்ஷி சிறிதேனும் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

சென்னையின் நிலைமை, ஐந்தாண்டு பஞ்சம் ஏற்பட்டதன்விளைவாக, பம்பாய், பீஹார் மாகாண நிலைமைகளைவிட மிகக் கேவலமாக ஆகிவிட்டதென்பதைக் தோழர் முன்ஷி நேரில் வந்தாலன்றி எவ்

(3-ம் பக்கம் பார்க்க)

## வெளி ஜில்லாக்களிலிருந்து அரிசி வரவழைக்க பர்மிட்

(o)

## இனி ரயில்மூலம்தான் கொண்டுவரலாம்

(o)

### தவறாக பயன்படுத்துவதைத் தடுக்க முயற்சி

சென்னை, டிச. 15—

வெளி ஜில்லாக்களிலிருந்து அரிசி தருவித்துக்கொள்ள பர்மிட் பெற்றுள்ளவர்கள் அதைத் தவறாகப் பயன் படுத்துவதாக சர்க்காருக்கு தகவல் கிடைத்திருப்பதால், இம்மாதிரி செய்வதைத் தடுக்கும் விஷயமாகச் சில உத்திரவுகளை கலெக்டர்களுக்குப் பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

பர்மிட் பெற்றிருப்பவர்கள் எவ்வளவு வரவழைக்க முடியுமோ அதற்கு மேலே அரிசியை வரவழைப்பதாகவும், காலவரை கேடு ஆன பின்பும் பல தவணைகளில் அரசி வரவழைப்பதாகவும் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ரயில் மூலமாக வரும் அரிசி பர்மிட்களில் ஸ்டேஷன் மாஸ்டர்கள் கையெடுத்திருவதால் பர்மிட்டை அதிகப்படியாகத்தவறாகப் பயன் படுத்த முடியாதென்றும் ஆனால் ரோடு வழியோ, கால்வாய் வழியோவரும் அரிசி விஷயத்தில் தான் பர்மிட்கள் அதிகமாகத் தவறாகப் பயன்படுத்தப் பட்டுவருகிறது என்று சர்க்கார் கருதுகின்றனர்.

ஆகவே கலெக்டர்களுக்கு சர்க்கார் பிறப்பித்துள்ள உத்திரவில் இம்மாதிரி பர்மிட்கள் ரெயில் மூலம் அரிசி கொண்டு வருவதற்காக மட்டும் தான் அளிக்கப்பட வேண்டும் என்றும் மிகவும் அத்யாவசியமான கேஸ்களில் மட்டும் தவிர, ரோட் மூலமோ கால்வாய் மூலமோ அரிசி கொண்டுவருவதற்கு பர்மிட் அளிக்கக்கூடாதென்றும் உத்திரவிட்டிருக்கின்றனர்.

இதற்கான நமூனாவை எப்படி பூர்த்தி செய்யவேண்டும் என்கிற நடைமுறையையும் சர்க்கார் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இந்த பர்மிட்டில் கிராம அதிகாரியின் கையெழுத்தைப் பெற வேண்டும். கிராம அதிகாரி கையெழுத்துப் போடும்போது எவ்வளவு அரிசி, என்று அனுப்பப்படவேண்டும் முதலிய விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இந்தக் கையெழுத்துப் பெறாமல் அரிசி தருவிக்கப்பட்டால் பர்மிட் பறிமுதலாகிவிடும். பர்மிட் உடையவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும்.

### கருப்புக் கொடி ஊர்வலம்

நெசவாளரின் அறுவறுப்பு

சங்கரநாயினர் கோவில், டிச. 13—

இந்நகர் கைத்தறி நெசவாளர் பட்டினி ஊர்வலம் 13-12-40 ல் நடந்தது. அதில் 6000 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் தங்கள் குறைகளைக் கவனிக்காமல் மேலும் மேலும் தொல்லையை அதிகப்படுத்திக் கொண்டும், உல்லாசப் பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் மந்திரிகளின் போக்கைக் கண்டித்தும் நம் நாட்டில் உற்பத்தியாகும் நூலை வடநாட்டுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு திராவிட கைத்தறி நெசவாளரைப் பட்டினி போட்டு வதைக்கும் கொடுமைகளைக் கண்டித்தும் கருப்புக் கொடி பிடித்து ஊர்வலம் வந்தனர்.

மாலை மணி

சென்னை 16—12—50 சனிக்கிழமை

# மூடிவைப்பதில் பயனில்லை

சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்க வந்த காங்கிரஸ் காரர்கள் இதற்குள் மூன்று மந்திரி சபைகளை அமைத்துவிட்டனர், இப்போது மூன்ருவது மந்திரி சபை ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கிறது. இவ்வாறு மூன்று மந்திரி சபைகள் மாறுவதற்குக் காரணம், எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டதாலன்று; அல்லது பொது மக்கள் உணர்ச்சிபெற்றுக் கிளர்ச்சி செய்ய, மானமும் பொறுப்பும் இருந்து அதனுல் பதவியை விட்டு விலகிவிட, அதனுல் ஏற்பட்ட மாறுதல்களுமன்று. ஆனுல், பதவி மோகம், அதிகார வெறி தலைக்கேற, அதனுல், காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே போட்டா போட்டி பலத்து, அவர்களுடைய கட்சிக்குள்ளாகவே தேர்தல் ஊழல்கள் மலிந்து, கைவலுத்தவர் பதவியாதிக்கம் பெறுவதென்னும் நிலையில்தான் மூன்று மந்திரி சபைகள் இந்த நாட்டில் இதற்குள்ளாக ஆட்சிப் பொறுப்பேற்க முனைந்தன. ஆனுல், என்ன காரணத்தாலோ இந்த மூன்று மந்திரி சபைகள் வந்துங்கூட, நாட்டிலே மழையும் பெய்யவில்லை; பஞ்சமும் நீங்கவில்லை; மக்கள் துன்பங்களினின்றும் விடுபடவில்லை.

இவ்வண்ணம் மாறிய மூன்று மந்திரி சபையாட்களும் ஊழல்களினின்று விடுபட்டிருப்பதாகவும் தெரியவில்லை. முதல் மந்திரி சபையின் முதலமைச்சராகிய தோழர் பிரகாசம் தமக்குப் பின் வந்த மந்திரி சபைகளின் அமைச்சர்கள் மீது எல்லாவிதமான ஊழல்களும் செய்திருப்பதாக நீண்டதொரு குற்றப் பட்டியல் தயார் செய்து சட்டசபையில் வெளிப்படையாகச் சமர்ப்பித்து, அவற்றைப் பற்றிய விசாரணை நடத்துவதற்கு உத்தியோகப் பற்றற்ற ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

இலஞ்ச ஊழல், உறவினர்களின் பெயரால் பர்மிட்கள் வழங்கப்படுதல், கள்ளச்சந்தைக்கு இடமளித்தல் போன்ற பல குற்றச்சாட்டுகள் தோழர் பிரகாசத்தால் கூறப்பட்டிருக்கின்றன. ஆனுல் அவற்றிற்குப் பதிலளிக்க வந்த இப்போதைய அமைச்சர்கள்—இவர்களுட் சிலர் பிரகாசம் மந்திரி சபையிலுமிருந்தவர்கள்—அப்போதெல்லாம் ஒன்றும் கூருமல் வாய் மூடிக்கொண்டிருந்தவர்கள்-இப்போது பிரகாசம் மந்திரி சபையினர் செய்துள்ள ஊழல்கள் சிலவற்றை வெளியிட்டிருக்கின்ருர்கள்.

ஆக, பொது மக்கள் இவற்றிலிருந்து தெளிவாக அறியக் கூடியது என்னவெனின், காங்கிரஸ் மந்திரி சபைகள் ஊழல்கள் மலிந்தவை என்பதேயாகும். பிரகாசம் மற்றவர்கள் மீதும், மற்றவர்கள் பிரகாசம் மீதும் குற்றம் சுமத்திக்கொண்டிருப்பதிலிருந்து நாம் அறியக்கிடப்பதும் இதுதான்.

ஆனுல், இப்போதைய சட்டசபையில் தோழர் பிரகாசத்தைவிட மற்ற மந்திரிகள் செல்வாக்குடையவர்களாயிருப்பதால், விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரும் பிரகாசத்தின் தீர்மானம் ஆதரவு பெற முடியாமல் தோற்றுப்போய்விட்டது. இவ்வாறு பிரகாசத்தின் தீர்மானத்தைச் சட்டசபையில் தோற்கடித்துவிட்டதாலேயே, அமைச்சர்கள் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் மக்கள் மனத்திலிருந்து மறைந்துபோய்விட மாட்டா.

எனவே, இப்போதைய அமைச்சர்களை மட்டுமின்றி, தோழர் பிரகாசம் மந்திரி சபை, தோழர் ஓமந்தூரார் மந்திரி சபை, தோழர் குமாரசாமிராஜா மந்திரி சபை ஆகிய மூன்று மந்திரி சபைகளைப் பற்றியும் வெளிவந்திருக்கும் ஊழல்களைப் பகிரங்கமாக விசாரணை செய்ய, நேர்மை தவருத நீதிபதிகள் கொண்ட ஒரு பொது விசாரணைச் சபையை ஏற்படுத்தி அதன் மூலம் விசாரணை செய்ய வைத்தலே நேர்மையான செயலாகும். இதற்கிணங்காமல் மூடிவைப்பதால், அரசாங்க அமைச்சர்கள் மீது ஏற்பட்டிருக்கும் நிந்தைகள் மறைந்துவிட மாட்டா.

## குழப்பம்!

### ஆசிரியருக்கா, நிருபருக்கா?

திண்டுக்கல், டிச. 13—

இவ்வூர் முன்னேற்றக் கழகச் சார்பில் எம். அய்யாசாமி. ஈரோடு அப்பாவு இவர்கள் வீர உரையையாற்றி நாட்டின் நலிவையும், பார்ப்பனரின் வஞ்சகச் செயலையும் கண்டித்துப் பேசினர். அதில் பார்ப்பன அடிமை ஒருவர் 'கேள்வி' என்று தாள் ஒன்றைக் கொடுத்தார்.

அதனடியில் 'சந்தேகி' என்று கையொப்பம் இடப்பட்டிருந்தது. அதற்கு வீரராசன், 'நீயே சந்தேகிதானே உனக்கு எதைச் சொன்னுலும் சந்தேகம்தான்' என்று கூறி

சந்தேகிக்கு ஆத்திரம் வந்து கூட்டத்தில் உரத்துப்பேச ஆரம்பித்தார். கழகத் தோழர்கள் அவருக்கு "பதில் சொல்லுவார்" உட்காருங்கள் என்று கூட்டத்தை அமைதியாகவும், வெற்றியுடனும் முடித்தனர்.

இதை சுதேசமித்திரன் குழப்பத்தில் முடிந்ததாக எழுதியிருக்கிறது. இப்பொழுது அவர்கள் மடமையெனும் மண்பாண்டத்தின் மீது உட்கார்ந்துகொண்டு இரும்பென நினைத்துக்கொண்டார்கள்போலும்! மக்கள் மண்டையில் மண்பாண்டத்தின் சக்தி எவ்வளவு என்பது ஏறிவிட்டது. இனிமேலும் பொய்ப்பிரசாரங்களும், குழப்பங்களும் நாட்டில் தலை காட்டாது நொறுக்கித் தள்ளும் வீர இளையர்கள் ஆயிரமாயிரம் திரண்டுவிட்டனர். நாட்டின் நிலை அறிந்து நன்மையாக நடந்து கொள்ளும்படி அவர்கள் பிற்கால வாழ்க்கையை அனுசரித்து கூறுகிருேம்.

பொய்ப் பிரசாரங்களும் கும்பகோணமும் இனி புரியார்களென நினைக்கிருேம். ஆட்சி அவர்கள் கையில் இருக்கிறதென ஆர்ப்பரிக்கலாம். ஆனுல் ஊர்ப் பேர் தெரியாத வரையில்தான்...

## வழி காட்டினுர்கள்

திருப்பதி, டிச. 12—

திருப்பதி வெங்கடேஸ்வரர் படத்தை கொளுத்தியதற்கு 5 தமிழ் மாணவர்களை நீக்கினர். அவர்கள் அப்பீல் செய்துகொண்டும் கமிட்டி நிராகரித்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அம்மாணவர்கள் உள்ளத்திலே மகிழ்ச்சி கொண்டிருக்கலாம். ஸாக்ரடீஸை அன்று விஷங்கொடுத்துக் கொன்ருர்கள். இன்ருே அவருக்கு ஒப்பானவர் இல்லை என்று அவர்களே போற்றவில்லையா?

இன்னும் சில ஆண்டுகளுக்குள் நடக்கப் போவதை நடத்திக்காட்டினுர்கள். அவர்களின் புரட்சிகரமான இந்த செய்கை இன்னும் சில ஆண்டுகளில் சாதாரணமான விஷயமாவதில் அவர்கள் உள்ளம் புன்னகை புரியலாம். எதிர்கால நவீன இந்திய சரித்திரத்தில் மார்ட்டின் லூதர்போன்றவர்வரிசையிலே அவர்களையும் எழுதப்படும் என்பது அவர்கள் அறியார்கள். ஏனெனில் சரித்திரம் உண்டாக்கினவர்கள் அல்லர் அக்கமிட்டியினர் என்பதை நினைவு படுத்துகிருேம்.

## வைத்யத் தொழில்மீது பேர்னுட்ஷாவிற்கு கோபம்

லண்டன், டிச. 15—

காலஞ்சென்ற பெர்னுட்ஷாவிற்கு வைத்யத் தொழிலைக் கண்டாலே வெறுப்பு உண்டு என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த வெறுப்பு எதனுல் ஏற்பட்டது அவை நியாயம்தானு என்பதைக் குறித்து "பிரிட்டிஷ் மெடிகல் பிரஸ்" என்ற சஞ்சிகை ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறது.

பெர்னுட்ஷாவிற்கு டாக்ட்ர் தொழிலின்மீது கோபம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தவை இரண்டு சம்பவங்கள் 1. பெர்னுட்ஷாவின் தகப்பனுரின் பார்வை சரியாக இல்லை என்பதற்காக பார்வை நன்ருகத் தெரியும்படி செய்ய ஆஸ்கார் ஒய்ல்டின் தகப்பனுர் ஒரு ஆபரேஷன் செய்தார். அது விபரீதப் பலனை ஏற்படுத்திவிட்டது. 2. பெர்னுட்ஷா தன் சிறு வயதில் அம்மை வாராமல் தடுக்க அம்மை குத்திக் கொண்டார். ஆனுல் அவருக்கு பெரியம்மை வந்து முகத்தையெல்லாம் விகாரப்படுத்தி விட்டது. முகத்திலுள்ள வடுக்களை மறைப்பதற்கென்றே அவர் தாடி வளர்த்தார்.

இவர் எழுதிய "டாக்டர்ஸ் டைலமா" என்ற புஸ்தகத்தில் சாவு வாழ்வு இவை எல்லாம் டாக்டர்கள் கையில்தான் என்று குறிப்பிட்டிருக்கிருர். "பிலாண்டார்" என்ற நாடகத்தில் கதாநாயகன் சாகவேண்டியவன் என்று தவறுதலாக உணர்த்தப்படுவதாக டாக்டர்களை கிண்டல் செய்து ஷா எழுதியிருக்கிருர்.

பொதுவாக வைத்யத் தொழிலையே குறை கூறுவது சரியல்ல என்று இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## இரண்டடுக்கு டிரேயின்கள்

### வெற்றிகரமாக நடைபெறவில்லை

லண்டன், டிச. 15—

லண்டன் சுற்றுப்புற பிரதேசங்களில் ஆபீஸ் செல்லும் நேரங்களில் ரயிலில்உள்ள பிரயாணிகளின்எண்ணிக்கை மிகஅதிகமாகஇருப்பதால் அவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுப்பதற்காக இரண்டடுக்கு (மாடியுள்ள) டிரெயின்கள் பரீட்சார்த்தமாகவிடப்பட்டன. இவை தக்க பலனை அளிக்கவில்லை என்று இப்போது தெரிந்துவிட்டது.

பிரயாணிகள் ஏறி இறங்குவதற்கே அதிக நேரம் ஆகிவிடுகிறது. இப்போதுள்ள ரயில் வண்டிகளில் அதிக பெட்டி (காரேஜ்) களை சேர்த்து ஓடவிடுவதுதான் நல்ல வழி என்பது தெரியவந்திருக்கிறது.

## பிரிட்டிஷ் "யூடிலிடி" விமானங்கள்

லண்டன், டிச. 15—

குறைந்த தூரம் செல்வதற்காகவென்றே "யூடிலிடி" விமானங்களை பிரிட்டன் தயார் செய்திருக்கிறது. இதில் 17 பேர் பிரயாணம் செய்யலாம். இதன் விலை 35000 பவுன்.

## அரியணை மீது ளா ர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

...வாறு அறிந்து கொள்ளுதல் கூடும்?

சென்னையில் ஏற்பட்டிருக்கும் மகத்தான உணவுப் பொருள் நெருக்கடியைச் சமாளிக்க முயல்வதை விட்டுப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முயலும் முன்ஷியின் போக்கை ஒரு பொறுப்புள்ள அமைச்சரின் போக்கென்று எவராலேனும் ஏற்றுக்கொள்ள முடியுமா?

எனவே, சென்னையில் அரசாங்கப் பொறுப்பு வகிப்போரேனும், வட நாட்டு மோகத்தையும், வடநாட்டவருக்குச் சரணம் சாமி பாடிக் கொண்டிருப்பதையும் தூக்கி எறிந்துவிட்டு நாட்டு மக்களின் நலத்தை மனத்தில் கொண்டு உடனடியாக நம் மாகாணப் பஞ்சத்தைப் போக்கும் முயற்சியில் ஈடுபடுவார்களா?

வடநாட்டார்களை எதிர்பார்ப்பதில் சற்றும் பயனில்லை. அவர்கள் நம்மவருக்கு உதவவும் மாட்டார்கள்; உதவவேண்டுமென்று கருதவும் மாட்டார்கள். வேண்டுமானால் அங்கிருந்து அகதிகளை ஏராளமாக இங்கனுப்பி வைத்து, நம் துன்பத்தை இன்னும் அதிகப்படுத்த முயலுவார்கள். கடந்த ஐந்தாண்டுகளில்— இங்குப் பஞ்சம் தலைவிரித்தாடிய காலத்தில்தான்— ஏராளமான அகதிகள் இங்கு இறக்குமதி செய்யப்பட்டார்கள் என்றால் வடநாட்டாரின் கன்னெஞ்சத்தை என்னென்று கூறுவது!

அதுமட்டுமா? வடநாட்டில் எங்கேனும் ஆற்றில் வெள்ளம் வந்து ஒன்றிரண்டு கிராமங்கள் அழியும்; பூகம்பம் வந்து இரண்டோர் கிராமங்கள் நாசமாகும். உடனே உண்டியல் செட்டி சென்னை மாகாணத்தைத் தேடி வந்துவிடும். இதற்கென்றே சில தலைவர்கள் இங்குக் கிளம்பி வந்துவிடுவார்கள் உண்டிப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு இங்குள்ள கள்ளச்சந்தைகளும் தங்கள் மீது மேலிடம் கண்ணோட்டம் செலுத்தக்கூடாதென்பதற்காக ஏராளமான பணத்தைக்கொண்டு வந்தவர்களுக்கு விருந்துவைத்தும் அனுப்பக் காத்துக்கொண்டிருக்கின்றன.

மேலும் சென்னை மாகாணம் உணவில்லாமல் கஷ்டப்பட்டு அரிசி வாங்கப்போனால், நம்நாடு என்று கூறப்படும் இந்த வடநாடு மாகாணங்கள் ஒன்றுக்குப் பத்தாக விலையை நம்நாட்டவரிடமிருந்து வாங்கவும் தயங்கவில்லை.

ஆனால், நம்நாட்டைச் சேர்ந்த தென்னாடு பஞ்சத்தால் ஐந்து ஆண்டுகளாக அவதிபட்டுக்கொண்டிருக்கிறதே என்று எந்த வடநாட்டுப் பேர்வழிக்கும் அக்கரையில்லை. இங்கிருந்து வாணிகத்தின் மீது சுரண்டிச்செல்லும் கருத்துடைய வடநாட்டுப் பணமூட்டைகளும் இதைப்பற்றிச் சற்றும் அக்கரை கொள்ளவில்லை. மானத்தில் கருத்துடைய தமிழகமோ, அந்த வடநாட்டிற்கு உண்டிப்பெட்டி தூக்கிச் செல்வதையும் விரும்பவில்லை.

எனவேதான் எந்தவகையிலும் நாட்டுத் தொடர்பு சென்னைக்குச் சிறிதும் தேவையில்லை. அத்தொடர்பால் சென்னை மகத்தான நஷ்டங்களுக்கு ஆளாகிறதே தவிர, பலன் ஒன்றுமில்லை. எனவே, வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் தொடர்பற்றுச் சென்னை ஒரு தனி நாடாக விளங்கவேண்டும் என்று திராவிட இயக்கம் வற்புறுத்திக் கூறிவருவதற்கு இவை போதிய சான்றுகளாயிருக்கின்றன.

எனவே, இப்போது நம்நாட்டுப் பஞ்சத்தை உடனே ஒழிக்கவேண்டுமானால், உடனே கண்ட்ரோல்கள் அனைத்தையும் ஒழித்துவிடவேண்டும். உணவுப்பொருள்கள் நம் மாகாணத்துக்குள் எங்கு வேண்டுமானாலும் தாராளமாய்ச் செல்வதற்கு அனுமதித்துவிட வேண்டும். வெளிநாடுகளிலிருந்து பர்மா, சியம், இந்தோசீனம், மலாய் நாடுகள், ஜாவா சுமத்ரா போன்ற விடங்களிலிருந்து, அரிசியும் மற்றைய உணவுப்பொருள்களும் ஏராளமாக இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை நேரடியாகச் செய்துகொள்ளவேண்டும். தனிப்பட்ட வணிகர்களுக்கு இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து ஏராளமாய் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய இடம்கொடுத்தல்வேண்டும். அரசாங்கம் புதிய புதிய தரிசு நிலங்களைப் பயிரிடுமாறு செய்யும் வேலையில் இறங்கித் தீவிரமாகப் பாடுபட வேண்டும். தரிசு நிலங்களை அரசாங்கமே ஏற்றுப் பண்ணைகளாக ஆக்கிப்பயிரிட வேண்டும். அதிகப்படியாகக் கிடைக்கும் உணவுத் தானியங்களை வாங்கிக் கிடைக்காமல் அவதிப்படும் ஜில்லாக்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இவ்வாறெல்லாம் செய்யும் துணிவு சென்னை அரசாங்கத்துக்கு ஏற்பட்டாலன்றி, இந்த நாட்டின் பஞ்சத்தைப் போக்குவதென்பது முடியாத காரியம். அரசாங்கம் மக்கள் நலத்தை மனத்திற்கொண்டு பொது நலப் பணியை எண்ணியேனும் இவ்வாறு செய்ய முன்வருமா?

---

### மவுன போலீஸ்காரன்!

லண்டன், டிச. 14—

மோட்டார் காரை டிரைவர் மிக வேகமாக ஓட்டி என்ஜினுக்கு பாதகம் விளைவிக்கக்கூடிய அபாயம் எப்பொழுதுமே இருக்கிறது. என்றாலும் டிரைவர் வண்டியை வேகமாக ஓட்டிச் செல்கிறாரா, என்பதை வீட்டிலுள்ள அதன் சொந்தக்காரர் அறிய வழியில்லை. இந்த சங்கடத்தைப் போக்க பிரிட்டிஷ் தொழில் ஸ்தாபனம் ஒன்று புரட்சிகரமான இயந்தரமொன்று கண்டுபிடித்துள்ளது. இந்த இயந்திரம், டிரைவர் காரை வேகமாகஓட்டினால் அப்படியே பதிவு செய்து கொள்ளும். வண்டி திரும்பி வந்ததும் சொந்தக்காரரிடம் அப்படியே சொல்லிவிடும். அதனால்தான் இதற்கு 'மவுன போலீஸ்காரன்' என பெயரிட்டுள்ளனர். இந்தக் கருவி என்ஜின் வேலைசெய்ய ஆரம்பித்தவுடன் டிரைவரின் நடத்தைகளை அப்படியே பதிவு செய்து கொள்ளுகிறது.

### 'டினேஷார்' ராக்ஷஸ பிராணியின் முட்டை

தாரஸ்ஸலாம், டிச. 15—

தங்கனீகாவில் ரூக்வா எரிப்பிரதேசத்தில் பல ஆயிர வருஷங்களுக்குமுற்பட்ட பெரிய முட்டைகளின் பாகங்கள் அகப்பட்டிருக்கின்றன. முன்பு இருந்ததாகக் கூறப்படும் டினேஷார் என்கிற ராக்ஷஸப் பிராணியின் முட்டையாக இருக்கலாம் என்று கருதப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி முட்டைகள் மங்கோலியாவிலும் பிரான்ஸிலும் காணப்பட்டிருக்கின்றன. இம்முட்டைகள் பிரிட்டிஷ் மியூஸியத்திற்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

---

### தூக்கம் வர மின்சார 'தலைகாணி'

நியூயார்க், டிச. 15—

தூக்கம் வராமல் கஷ்டப்படுபவர்கள், படுக்கையில் படுத்துக்கொண்டு குருட்டு யோசனை செய்பவர்கள் இவர்களுக்கு சுகமாக தூக்கம் வர ஒரு நூதன வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் தலைக்கு வைத்துபடுக்க ஒரு மின்சார தலைகாணி ஒன்று இருக்கிறது. படுத்துக்கொள்ளுமுன் பிளக்கைப் போட்டுவிட வேண்டுமாம்.

தாலாட்டுவதுபோல ஒரு உணர்ச்சிஏற்படுவதுடன் மண்டை, கழுத்து ஆகிய இடங்களிலுள்ள நரம்புகள் எல்லாம் தடவிவிடப்படுவதுபோன்ற உணர்ச்சி எடுபடுகிறதாம். குஷியாக தூக்கம் வர கேட்பானேன்?

---

### பட்டேல் மாண்டார்

மத்திய அரசாங்க உதவி மந்திரி தோழர் சர்தார்வல்லபாய்படேல் உடல்நலன் கருதி பம்பாய் வந்திருந்தார். அவர் இன்று காலை 9-37 மணிக்கு மரண மடைந்தார். உயிர் போகும்போது அவருடைய குமாரத்தியும் குமாரர்களும் மற்றும்முக்கியமான உறவினர்களும் கூடவே இருந்தன.

படேல் இறந்த செய்தி உடனே இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களுக்கும்தெரிவிக்கப்பட்டன. அரசாங்க அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டன.

படேல் பிரதே ஊர்வலம் மாலை 4-30 மணிக்குப் புறப்பட்டு முக்கிய வீதி வழியாகச் சென்று சுடலையை அடையும். பிரதமர் நேரு, இராஜகோபாலாச்சாரி, ராஜேந்திரபிரசாத் பம்பாய் வந்து தங்களுடைய கடைசி மறியாதையைச் செலுத்தினர்.

---

### கழகத் தோழர்களுக்கு!

திராவிட முன்னேற்ற கழக நிகழ்ச்சிகளையும். ஆங்காங்கு நடைபெறும் கழக கூட்டங்களின் விவரங்களையும் உடனுக்குடன் "மாலை மணி" அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்

## இனி நடப்பவை

திருவாரூர்: - 19-12-50 செவ்வாய்கிழமை மாலை 4-30-மணிக்கு "குமரி நிலைய" மேல் மாடியில் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெறும். பல முக்கிய அலுவல்கள் பற்றி ஆலோசிக்க வேண்டி இருப்பதால் உறுப்பினர் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

* * *

அயன்புரம்:--நம்மாள்வார் பேட்டையில் 16-12-50 மாலை மறைமலை அடிகள் நினைவு நாள் கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி. தலைமையில் மு. கருணாநிதி: ஜீவரத்தினம், புலவர் கண்ணன், மு. வெ. ராஜமாணிக்கம் பத்மாவதி, ஜீவானந்தம் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

சென்னை:—ஞாயிறு 17-12-50 காலை 10-மணிக்கு 83, தையப்ப முதலி தெருவில் தோழர் எஸ். சுசபதி தலைமையில் "தோழமை" என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் அனைவரும் கலந்துக் கொள்ளலாம்.

* * *

தூத்துக்குடி: 19—12—50 செவ்வாய்க்கிழமை தி. மு. கழக பொதுக்கூட்டம் வ. உ. சி. மைதானத்தில் நடைபெறும். அதுசமயம் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. பேசுவர்.

* * *

செயங்கொண்டம்:—திராவிட முன்னேற்றக் கழக முதலாவது ஆண்டு விழாவும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துவக்கவிழாவும் 17-12-50 மாலை 5 பணிக்கு நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எ. கே. வேலன், என். சி. பன்னீர்செல்வம் முதலியோர் பேசுவார்கள்.

* * *

நெல்லிகுப்பம்.—தென்னாற்காடு மாவட்ட திராவிட மாணவ முன்னேற்றக்கழக அமைப்புக்கூட்டம் 17-12-50 பிற்பகல் 4 மணிக்குமேல் என். வி. நடராசன் தலைமையில் ரெட்டித் தெரு, ஜனார்த்தனம் இல்லத்தில் நடைபெறும் அனைவரும் கலந்துகொள்க.

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

### 18—12—50

**சின்ன சேலம்**

தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஈரோடு அப்பாவு.

**களம்பூர்**

தோழர்கள் எம் எம். புருஷோத்தம், கே. சுப்பரமணியம், யு. எல். ஷண்முகம்.

### 19—12—50

**தூத்துக்குடி**

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

## தி. மு. கழக கிளைகள்

**திருத்தணி**

22-11-50-ல் தி. மு. க. கிளை மைக்கப்பட்டது செயலாளர் அ. ரஷீத், துணைச்செயலாளர் மா. கோவிந்தசாமி, பொருள் றுப்பினர் மு. சு. வேணு, விளம் உறுப்பினர் மா. பத்மநாபன்.

* * *

**வனூர்**

9-11-50-ல் தோழர் ராமானுஜம் வர்கள் தலைமையில் கூடியபொது டத்தில் செயலாளர் முத்த பருமாள், துணைச்செயலாளர் மதேவன், பொருளாளர் இளஞ் சாழன், விளம்பரஉறுப்பினர் ந. ண்ணன் இவர்களைக் கொண்டு மு. கி. க. அமைக்கப்பட்டது.

* * *

**வெள்ளக்கோயில்**

11-12-50-ல் பழனிசாமி தலைமை யில் கூடி தி. மு. க. கிளை அமைக் பட்டது. உறுப்பினர்: செய ளர் சி. முத்துசாமி, துணைசெய ளர் ஆர். அய்யாவு, பொருளா ர் பாலசுப்ரமணியம், விளம்பர உறுப்பினர் அ. வீராசாமி, செயற் குழுவினர் என் கிருஷ்ணன், பி. லாகநாதன், கே. ராமசாமி, எம். ப்ரமணியம், ஆறுமுகம், எஸ். கே. குமாரசாமி, கருப்பையா, எம். ன்னத்தம்பி, டி. கே. குமாரசாமி.

* * *

**எல்பிட்டியா (இலங்கை)**

10-12-50ல் தோழர் கே. எப். எஸ். கலாநேசன் தலைமையில் அண்ணா மன்றம்' அமைக்கப்பட்டது. உறுப்பினர். செயலாளர் ஏ. வெ. அன்பானந்தன் துணை எம் டேசன், பொருளாளர் ஏ. ஜார்ஜ்.

## தி. மு. கழகம்

## இதுவரை தழைத்துள்ள கழகங்கள்

## 512

## ஏஜெண்டுகளுக்கு

"மாலைமணி" ஞாயிற்றுக் கிழமைகளிலும் இனி வெளி வரும் ஏஜண்டுகள் தங்கள் பார்சல்களைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்.




## தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

**மதுராந்தகம்**

10—12—50-ல் காந்தி மண்டபத்தில் தி. மு. க. வின் பொதுக் கூட்டத்தில் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் நின்றுக்கொண்டிருந்தனர். அதுபோது அண்ணா அவர்கள், ஆளவந்தாரின் ஆணவப் போக்கைக் குறித்தும், நெசவாளர், விவசாயியின்குறைகள் பற்றியும் இடித்துரைத்தார். பிறகு மேலும் பேசுகையில் சமுதாய இழிவு, திராவிட நாடு பிரியவேண்டிய அவசியம் பற்றி பேசினார். சுதர்சன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

**திருநெல்வேலி**

12—12—50 செவ்வாயன்று, இரவு 8மணிக்கு திருநெல்வேலி சந்திப்பு ஆற்றுப்பாலத்தருகேயுள்ள மணற்பரப்பில் நெல்லை நகர் திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. கூட்டத்திற்கு நெல்லை மாவட்டத் துணைச்செயலாளர் தோழர் இரா. சு. தங்கப்பழம் தலைமைதாங்கினார். கழகப் பிரச்சாரக்குழு உறுப்பினர் தோழர் ஈ. வி. கே. சம்பத் கழகக் கொள்கைகளையும், அரசியலாரின் அறியாமை கலந்த ஆணவப்போக்கையும், விளக்கி சுமார் 1 மணி நேரம் பேசினார் பின்னர் தலைவர் முடிவுரை வழங்க, கூட்டம் 9-30 மணிக்கு கலைந்தது. கழக அநுதாபிகளான இளைஞர்களும் மாணவர்களும் மழையினால் ஏற்பட்ட இடையூறுகளையும் சகித்துக்கொண்டு ஆர்வத்துடன் குழுமியிருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. அன்று மாலை 5 மணிக்கு தோழர் சம்பத் கழகக் கட்டிடத்தில் கொடியேற்றிவைத்தார்.

## சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

**"மாலைமணி" பதிப்பகம்**

மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu